2000 மே 4]

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரப் பிரச்சினையில் என்னுடைய கருத்துக்கள் இன்னும் கொஞ்சம் ஆழமான கருத்துக்கள். எனவே அதற்கான விளக்கத்தை நான் அளிப்பதற்கு எனக்கு இப்போது வாய்ப்பு இல்லை. எனவே, முதலமைச்சர் அவர்கள் டில்லியிலிருந்து திரும்பி வந்தபிறகு மீண்டும் அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு தாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பரசன் அவர்கள் பேசுகின்றபோது, இராஜிவ் காந்தி அவர்களைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அப்போதே அவர் பேசாமல் தடுத்து நிறுத்தி விட்டேன்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கை

(அ) கிருஷ்ணா நீர் கண்டலேறு அணையிலிருந்து சென்னைக்கு வருகை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அனுமதி கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக, கிருஷ்ணா நதி நீரைப் பற்றி, நான் ஏற்கெனவே அவைக்குக் கொடுத்த வாக்குறுதியின்பேரில், நிச்சயமாக ஒரு மணி நேரம் விவாதம் நான் அனுமதிக்கப் போகிறேன் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தடைகளைக் கடந்து 3-5-2000 அன்று இரவு 8 மணியளவில் ஆந்திராவில் உள்ள கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா தண்ணீர், சென்னை மாநகரின் குடிநீருக்காக திறந்து விடப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகப் பெரு முயற்சி எடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், ஆந்திர மாநில முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களுக்கும், ஆந்திர மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு மண்டல் வெங்கடேஸ்வரராவ் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை இம்மாமன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)